**சுற்றறிக்கை இல: 35/01/005/0010/20**

2018 செத்தெம்பர் 19

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்**

அத்தகைய நாணயக் கடிதங்கள் திறக்கப்படும் நேரத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட இறக்குமதிப் பெறுமதியில் குறைந்தபட்ச 100 சதவீத காசு எல்லையொன்றினை அத்தகைய நாணயக் கடிதங்கள் உள்ளடக்கியிருந்தாலன்றி அட்டவணை அ (இணைக்கப்பட்டுள்ளது) இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களைத் தவிர, உந்து ஊர்திகள் இறக்குமதிக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் நாணயக் கடிதங்கள் திறக்கப்படலாகாது என்பதனை உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படும் உந்து ஊர்திகளுக்காக பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

1. உந்து ஊர்திகள் இறக்குமதியினை உள்ளடக்குகின்ற தற்போது காணப்படுகின்ற நாணயக் கடிதங்கள் தொடர்பில், மேலே பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மீதானவை தவிர அத்தகைய நாணயக் கடிதங்களின் பெறுமதியில் ஏதேனும் அதிகரிப்பெதுவும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அனுமதிக்கப்படலாகாது.

2. இச்சுற்றறிக்கையினால் விதிக்கப்படும் குறைந்தபட்ச எல்லைத் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு அத்தகைய வாடிக்கையாளர்களை இயலச்செய்யும் நோக்கத்திற்காக தமது இறக்குமதி வாடிக்கையாளர்களுக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஏதேனும் முற்பணங்களை வழங்கலாகாது.

3. இச்சுற்றறிக்கைக்கிணங்க எல்லை வைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கு வங்கிகள் தொடர்புடைய விலைப் பட்டியல்களில் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

இந்தப் பணிப்புரையின் அட்டவணை அ இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/DOD_Circular_No_35_01_005_0010_20_e.pdf என்ற வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.